★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3 சென்னை: மாசி 20உ சனி (3–3–56) ★ ★ வெளியூர்: மாசி 21உ ஞாயிறு (4–3–56) இதழ் 223

அனந்தசயனம் அய்யங்காருக்கு அடிக்கிறது யோகம்!

மாவ்லங்கர் இயற்கையெய்திமையால் மக்கள் சபையில் காலி ஏற்பட்ட தலைவர் பதவிக்கு, உதவித் தலைவராயிருந்த அனந்த சயனம் அய்யங்கார் காங்கிரஸ் மக்கள் சபைக் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

இவர் பெயரை முன்மொழிந்த நேரு பண்டிதர், உதவித் தலைவர் குறித்து பிறகு யோசிக்கலாம் என்றும் கருத்தறிவித்திருக்கிறார்.

மொழிவழி மாநிலக் கோரிக்கை இயற்கையான அபிலாஷையே!

மொழி வெறியோ, ஏகாதிபத்திய நோக்கமோ கொண்டதல்ல

எதிர்ப்போருக்கு ஆந்திர முதன் மந்திரி சூடு

"'தெலுங்கு பேசும் எல்லா மக்களும் ஒரே மாநில நிர்வாகத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும்' என்று ஆந்திர சட்டசபை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இந்த கோரிக்கையில் சிறிதளவுகூட மொழி வெறியோ, ஏகாதிபத்திய நோக்கமோ கிடையாது.

"ஒரு மொழி பேசும் மக்களெல்லோரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்ற இயற்கையான அபிலாஷைதான் அந்தக் கோரிக்கையாகும்"

என்று, ஆந்திர முதன் மந்திரி கோபல ரெட்டியார், வரவு-செலவுத் திட்டம் குறித்து சட்டசபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"சரித்திரத்தில் நிகழும் சில சம்பவங்கள் மக்களைப் பிரித்துவைத்து, சில பொதுக் காரியங்களுக்காக அவர்கள் ஒன்றுசேர முடியாவண்ணம் செயற்கையான தடைகள் விதிக்கப்பட்டுவிடுகின்றன.

"கோலார் மாவட்டங்கள், ஆந்திரா மாவட்டங்கள், தெலிங்கானா மாவட்டங்கள் இங்கெல்லாம் வாழும் தெலுங்கு பேசும் மக்களின் கலாச்சார வளர்ச்சியை நாம் நுணுகி ஆராய்ந்தால், குறிப்பிடத் தகுந்த வேறுபாடுகளை நாம் காணமுடியும். இந்த மக்கள் எல்லாம் ஒரே நிர்வாக அமைப்பிற்குள் ஒட்டி வளர்ந்திருப்பார்களேயானால், இந்த வேறுபாடுகள் மிகக் குறைவாயிருந்திருக்கும்.

"விசால ஆந்திரம் அமைவதில் கஷ்டங்களும், பொறுப்புக்களும் இருக்கத்தான் செய்கின்றன. நமது எல்லைகள் விரிவாகும்போது, மாநிலத்தின் அலட்சியப் படுத்தப்பட்ட பகுதிகளுக்கும், சமூகத்தின் தாழ்ந்த நிலையிலிருக்கும் பிரிவினருக்குமான நமது பொறுப்புகளும் அதிகமாகும், வளரும்"

என்றும அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பொது இன்ஷ்யூரன்ஸ்: தேஷ்முக் கருத்து

பொதுஇன்ஷ்யூரன்ஸ் தொழிலை சர்க்கார் தேசியமயமாக்க வேண்டும் என்று கூறப்பட்ட ஒரு யோசனையை சர்க்கார் ஏற்பதற்கில்லை என நிதிமந்திரி தேஷ்முக் மக்கள் சபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

வெள்ளையரின் நிறத் திமிர்

வெள்ளையரல்லாதாருக்கு அநீதி

தென்னாப்பிரிக்காவில் பொது வாக்காளர் பட்டியலிலிருந்து வெள்ளையரல்லாதாரை நீக்கித் தனியாக்கிவிடவேண்டுமென பார்லிமெண்டில் நிறைவேறிய மசோதா, கவர்னர்-ஜெனரலின் சம்மதத்தைப் பெற்றுவிட்டதால், மார்ச் 2-ந் தேதி முதல் சட்டமாகி விட்டதாக கேப்டவுன் செய்தி ஒன்று கூறுகிறது.

பிரிட்டிஷாருக்கு வேட்டு

ஜோர்டான் மன்னர் நடவடிக்கை

அரபு படையின் சேனாதிபதியாகவிருந்த பிரிட்டனைச் சேர்ந்த ஜெனரல் ஜான்கிளப், அரபு படையின் துப்பறியும் இலாகா தலைவர் கர்னல் பாட்லி காகில் ஆகிய இருவரையும் ஜோர்டான் நாட்டு மன்னர் வேலையிலிருந்து நீக்கி உத்தரவு பிறப்பித்துள்ளதாக அம்மான் நகரிலிருந்து தகவல் தரப்படுகிறது.

மத்திய கிழக்குப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சேருவதில்லை என்று ஜோர்டான் தீர்மானித்த பிறகு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாம். இந்த இராணுவ ஒப்பந்தத்தை எகிப்து, மற்றும் அரபு நாடுகள் எதிர்க்கின்றன.

ஜோர்டானை இந்த ஒப்பந்தத்தில் சேர்த்துக்கொள்ள பிரிட்டன் இசைந்ததும், அதை ஒட்டி ஜோர்டானில் கலவரங்கள் நிகழ்ந்ததும் நினைவிலிருக்கலாம்.

கோடைகால தலைநகராக உதகை!

நிதி மந்திரி கருத்து

சென்னை, மார்ச் 2—

"சட்டசபை உறுப்பினர்கள் ஒருமனதாக விரும்பினாலன்றி சபைக் கூட்டங்களை உதகையில் நடத்துவதோ, சர்க்கார் அலுவலகங்களை அங்கு மாற்றவோ ஏற்பாடு செய்வது சாத்தியமானதல்ல,"

என்று, சென்னை நிதிமந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

உதகையை ஒரு நல்ல யாத்ரீகர் ஸ்தலமாக்குவதே பிரச்சினை என்றும், அங்கு ஏற்கனவே ஒரு தகவல் அலுவலகம், யாத்ரீகர் நிலையம் இருக்கின்றன என்றும், மேலும் அங்குள்ள வசதிகளை விருத்தி செய்வதற்கான திட்டங்கள் பரிசீலனையிலிருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

உத்தர பிரதேசம் இன்னும் பெரிதாக வேண்டுமாம்!

விந்தியப் பிரதேசத்தை இணைக்க வேண்டுமென்பது சுயநலமல்லவாம்

"உத்திரப் பிரதேச மாநிலத்துடன் விந்தியப் பிரதேசத்தையும் இணைக்க வேண்டும் என்ற எங்கள் கோரிக்கை சுயநல நோக்கமுடையதல்ல"

என்று, உ. பி. மந்திரி டாக்டர் சம்பூர்ணானந்த் சட்ட சபையில் கூறியிருக்கிறார்.

ஏற்கனவே, 'மிகப் பெரியதாயிருக்கிறது; துண்டாடப்பட வேண்டிய ஒன்று இது' என்ற கருத்து பரவலாகி வலுத்துவரும் நாட்டில், விந்தியப் பிரதேசமும் தங்களுடன் இணைய வேண்டுமென்ற விசித்திரமான கோரிக்கையை உ. பி. காங்கிரசார் எழுப்பிருக்கின்றனர்!

"விந்தியப் பிரதேச முழுவதும் இல்லாவிட்டால் பரவாயில்லை; 'பாசல்கண்ட்' என்று அழைக்கப்படும் பகுதி மட்டுமேனும் உ. பி. யுடன் இணையச் செய்யவேண்டும்" என்று மாநிலச் சர்க்கார் டில்லிக்கு எழுதியிருக்கின்றனராம்.

இந்தக் கோரிக்கை சுயநல நோக்குடையது அல்லவென்றும், விந்தியப் பிரதேசம் தனது தனித் தன்மையை இழந்து, ஏதாவது ஒரு மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று கருதப்படுமானால் அப்போது, அது உ. பி.-யுடன்தான் இணையவேண்டும் என்ற விந்தியப் பிரதேச மக்களின் ஆவலுக்கு ஒப்பவே கோரிக்கை எழுப்பப்படுகிறது என்றும் மிகச் சாதுர்யமாக சம்பூர்ணானந்த் பேசியிருக்கிறாராம்.

விந்தியப் பிரதேச மக்களின் விருப்பத்திற்கு இணங்க வேண்டுவது அவசியம் என்றும், டெல்லிக்கு எழுதப்பட்டிருக்கிறதாம்.

விந்தியப் பிரதேச மக்களுக்கு சேவை புரிய வேண்டுமென்ற நோக்கத்துடன் தானேயன்றி, சுயநல நோக்கத்திற்காக அல்ல என்று முதன் மந்திரி கூறிய போது, சபையில் பெரும் மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்ததாம்.

'விந்தியப் பிரதேசம் உத்திர பிரதேசத்துடன் இணைவதால், அதனால் உத்தர பிரதேசத்திற்கு ஏதேனும் சாதகம் இருக்குமானால் அது சந்தர்ப்ப வசமானதே' என்றும் சம்பூர்ணானந்த் தெரிவித்தாராம்!

'அர்த்த சாஸ்திரம்' கூறும் திருட்டுத்தனங்கள்

அத்தனையும் இன்ஷ்யூரன்ஸ் தொழிலில் உண்டு

மக்கள் சபையில் பெரோஸ் காந்தி வர்ணனை

இந்திய இன்ஷ்யூரன்ஸ் தொழிலில் எத்தனை சீர்கேடுகள் இருந்தன என்பதை மக்கள் சபையில் பேசிய உறுப்பினர்கள் வெட்டவெளிச்சமாக்கியிருக்கின்றனர்.

'தொழிலைத் தேசீயமயமாக்குவது கூடாது' என்று ஓலமிடுவோரின் கண்களை மக்கள்சபை விவாதத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் திறக்க வேண்டும்.

தோழர் பெரோஸ் காந்தி மக்கள் சபையில் இது குறித்துத் தந்த கருத்துரையின் சாரம் கீழே தரப்படுகிறது:—

"அவசரச் சட்டம் மூலம் இன்ஷ்யூரன்ஸ் தொழில் தேசீயமயமாக்கப்படாமல் இருக்கும் பட்சத்தில், விளைவுகள் பயங்கரமானதாக இருந்திருக்கும். அத்தொழிலில் ஈடுபட்டிருந்த சிலர் செய்த தவறுகள் மற்றவர்களை

(4-ம் பக்கம் பார்க்க)

இரயில் பாதை புதுப்பித்தல்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கண்டுள்ளபடி, ஆண்டு ஒன்றுக்கு 2,000 மைல் இரயில் பாதைப் புதுப்பிக்கும் திட்டத்தை எக்காரணத்தாலும் தாமதப்படுத்தக் கூடாதென மக்கள் சபையின் மதிப்பீட்டுக் குழு தெரிவித்திருக்கிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி

நெய்வேலிக்கு ரூ. 1 கோடியாம்!

புதுடில்லி, பிப். 29—

சென்னை மாநிலத்தில்நெய்வேலி பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுக்கும திட்டத்திற்கு 1956-57-ம் ஆண்டிற்கு மத்திய சர்க்கார் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1 கோடி ஒதுக்கப் பட்டுள்ளதெனத் தெரியவருகிறது.

பீகாரில் குடிசை கட்ட ரூ. 200! சென்னையிலோ ரூ. 30-தான்!

குறைவாயிருப்பதற்குக் கண்டனம்

புயலாலும், வெள்ளத்தாலும் விடிழந்தோருக்கு சென்னை சர்க்கார் தரும் உதவித் தொகை மிகக் குறைவாகயிருப்பது, சென்னை சட்டசபையில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

சட்டசபையில் பேசிய எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள், சென்னை மாநில சர்க்கார், புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு நிவாரணம் இன்னும் சில ஆண்டுகளுக்கேனும் தொடர்ந்து தரப்படவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்.

பீகாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள ரூ. 200 வரை தரப்பட்டதாகத் தனக்குத் தெரிய வந்திருப்பதாயும், சென்னை சர்க்கார் ரூ. 30 மட்டுமே தருவதாகவும், பீகாரில் தருகிற அளவு தராவிட்டாலும் இன்னும் சற்று அதிகமான அளவு உதவித் தொகை தரப்படவேண்டும் என்றும் திரு முத்தையா (செட்டியார்) அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

நிலவரி வஜாசெய்வதிலும் மாவட்ட அதிகாரிகள் தாராளமாக நடந்து கொள்ளுமாறு உத்தரவிடப்பட வேண்டும் என்றும் அவர் கோரியிருக்கிறார்.

தங்கவயலை பொதுச் சொத்தாக்க சட்டம் இயற்றுமாறு மைசூருக்கு யோசனை

கோலார் தங்கவயலை தேசிய உடைமையாக்குவது குறித்து மைசூர் சர்க்காருக்கும்—டில்லி சர்க்காருக்கும் இடையில் கடிதப் போக்கு-வரத்து நடைபெறுவதாக இயற்கைவள இலாகா மந்திரி மாளவியா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து சட்டம் இயற்றுமாறும் மைசூர் சர்க்காருக்கு டில்லி சர்க்கார் யோசனை தெரிவித்திருப்பதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 3—3—'56 சனி

மூக்கு வெளுக்கிறது!

குதிரைக் குட்டியோ என ஐயுறும் வண்ணம், அதுவும் குட்டியில் காண்பதற்கு அழகாக இருக்கும். ஆனல் காலப் போக்கில், மூக்கு வெளுத்து, புறங்கால் இடிபட்டு, அதன் அவலட்சணமான உருவத் தோற்றம் அம்பலமாகிவிடும்.

தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தை கனம் காமராஜர் எதிர்க்கிருர் என்று பொருள் படும்படியாக, அக் கருத்து உலாவத் தொடங்கியது முதல் பலமாகக் கூறப்பட்டு வந்தது. அதை, அவரும் மறுக்காமலும் ஏற்காமலும் இருந்துவிட்டார். எனவே, தட்சிணப் பிரதேச ஏற்பாட்டில் முதலமைச்சரின் கருத்து என்ன என்பதை, திட்டவட்டமாகத் தெரிவதற்கு இடமில்லாமல் இருந்துவந்தது.

இருந்தாலும் தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தை அமிர்தசரஸ் காங்கிரஸ் மேடையில் தீவிரமாக ஆதரித்து நிதி அமைச்சர்கனம் சுப்பிரமணியம் பேசினர். கனம் காமராசர் அவ்வேற்பாட்டை முதல் முதலாக ஆதரித்துக்காங்கிரஸ் மேலிடத்தாரின் பாராட்டுதலைப் பெறத் தவறிவிட்டதற்காகவும், நிதி அமைச்சர் வெளிப்படையாகக் கண்ணீரும் சிந்தினர். நிதி அமைச்சரின் துணிவு கண்டு, இந்தியப் பிரதமர் நேரு, அவரைத் தட்டியும் கொடுத்து உற்சாகம் ஊட்டினர்.

தட்சிணப் பிரதேச ஏற்பாட்டை வரவேற்றுப் பேசினதுடன் நிதி அமைச்சர் நின்றுவிடவில்லை. முதலமைச்சர் காமராசரின் அனுமதி பெற்ற பிறகுதான் அக்கருத்தை ஆதரித்துப் பேசியதாகவும் அவர் அறிவித்தார்.

தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தில் முதலமைச்சருக்கு உடன்பாடு இல்லாது இருக்குமானல், நிதி அமைச்சர் வெளிப்படையாகக் கூறியுள்ளதை, அவர் மறுத்திருக்கவேண்டும். ஆனல், அதை முதலமைச்சர் மறுக்கவில்லை. மறுப்பதற்கு மாருக, அவ்வாறு நிதி அமைச்சர் பேசினதில் தவறு ஒன்றுமில்லை என முதலமைச்சர் மழுப்பிவிட்டார்.

அமிர்தசரஸ் காங்கிரஸ் மேடையில் முதலமைச்சர் ஒப்புதலுடன் தட்சிணப் பிரதேச அமைப்பை ஆதரித்துப் பேசினதுடனும் நிதிஅமைச்சர் இருந்துவிடவில்லை. தஞ்சை கூட்டமொன்றிலும் நிதிஅமைச்சர் அக்கருத்துக்கு ஆதரவு திரட்டும் வகையில் பேசிஇருக்கிருர்.

தட்சிணப் பிரதேச அமைப்புக் கோட்பாட்டிற்கு நிதி அமைச்சர் மட்டுமே ஆதரவு காட்டுகிருர் என்பதில்லை. முதலமைச்சர் காமராசரும் அதை வரவேற்கத் தயாராக இருக்கிருர் என்றுதான் ஏகதேசமாக யூகிக்க வேண்டி இருக்கிறது.

தட்சிணப் பிரதேசக் கோட்பாட்டை முதலமைச்சர் மனப்பூர்வமாக ஆதரிப்பதாக இருந்தால், அதை, அவர் வெளிப்படையாகக் கூறமாட்டாரா? அவ்வாறு கூருததிலிருந்தே, அவர், அதை ஆதரிக்கவில்லை என்பது தெரியவில்லையா? என்று, அவர் புன்முறுவலுக்கு வாய்ப் பிளந்து காத்துக் கிடக்கும் சிலர் வினவக்கூடும்.

ஊர் பிள்ளையைவிட்டு ஆழம் பார்க்கின்ற ஒரு மோசடியான யுக்தியைத் தவிர, தட்சிணப் பிரதேசக் கருத்தை நிதி அமைச்சரை விட்டு ஆதரித்துப் பேச முதலமைச்சர் ஏற்பாடு செய்ததில் வேறு ஒரு புத்திசாலித்தனமுமில்லை. எதிர்ப்பின் தன்மையையும் அளவையும் அறிந்துகொள்ளும் நோக்கத்துடன்தான் நிதி அமைச்சர் பலியாக்கப்பட்டிருக்கிருர் என்ற உண்மை விளக்கமாகிவிட்டதை நாம் மறப்பதற்கில்லை.

தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தில் நிதி அமைச்சரை விட்டு விஷப் பரீட்சைப் பார்க்கும் விசித்திர அரசியல் சூத்தை நீடித்து நடத்த கனம் காமராசரால் இயலவில்லை. இப்பொழுது தாமே வேஷம் கட்டிக்கொண்டு அரங்கத்தில் ஆடவேண்டிய கட்டாயம் முதலமைச்சருக்கு ஏற்பட்டிருக்கிறது.

மொழிவழி அரசு அமைப்பதையும் கடந்த முப்பது ஆண்டுக் காலமாக காங்கிரஸ்தான் தீவிரமாக வலியுறுத்தி வந்தது. அதைக் கைவிட்டு இருமொழி—பல மொழி கருத்தை மேற்கொள்ள வேண்டும் என மூர்க்கத்தனமாக வலியுறுத்த முற்பட்டிருப்பதும் அதே காங்கிரஸ்தான்.

காங்கிரஸ் மேலிடத்தாரின் கொள்கைதான் காங்கிரஸ் கொள்கையாகும். அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கக் காங்கிரஸ் கட்சியினர் கடமைப்பட்டிருக்கிறனர். காமராசரும், கனமாக இருந்தாலும் அதற்குக் கண்டிப்பாகக் கட்டுப்படவேண்டியவரேயாவார்.

குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் காங்கிரஸ் மேலிடம் இறுதியான முடிவிற்கு வருகின்ற வரையில், அக்குறிப்பிட்ட விஷயத்தில் தம் கருத்தைக் கூற கனம் காமராசர் போன்றவர்களுக்கு முழு உரிமை உண்டு. ஆனல் அந்த உரிமையைக் காங்கிரசிலுள்ள அனைவரும் நிறைவேற்றுகிருர்களா இல்லையா என்பது வேறு விஷயம். அது, அவரவர்களுடைய நெஞ்சுரத்தையும், அறிவையும், கொள்கைப் பிடிப்பையும், சேவா உணர்ச்சியையும் பொறுத்துள்ள ஒன்ருகும்.

குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் இறுதியான முடிவுக்குக் காங்கிரஸ் மேலிடம் வந்துவிட்ட பிறகு, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எவரும், அம்முடிவை ஒப்புக்கொண்டு செயலாற்றியாக வேண்டும். அதைச் செயலாற்ற முடியாது எனக் கூறும் ஒருவரும், அதற்கு மேல் ஒரு விநாடியும் காங்கிரஸ் கட்சியில் இருக்க முடியாது. அத்தகையவர் காங்கிரஸ் கட்சியிலிருந்து அடுத்தகணமே விரட்டப்படுவர்.

காங்கிரஸ் செய்த இறுதியான முடிவை, காங்கிரசில் இருந்துகொண்டு, எவராலும் செயலாற்ருமல் காலங்கடத்த முடியாது என்று முன் குறிப்பிட்டோம். மற்ற காங்கிரஸ் தலைவர்களால் அது முடியுமோ முடியாதோ, கனம் காமராசரால் அவ்வாறு நடந்துகொள்ள கண்டிப்பாக முடியாது என்பது உண்மையிலும் உண்மையாகும். காங்கிரஸ் தலைவர் என்ற ஒரு தகுதிதானே அவரை கனமாக்கி இருக்கிறது. நிலைமை அவ்வாறு இருக்கும்பொழுது, கனம் காமராசர், காங்கிரஸ் தீர்மானத்திற்கு எதிராகசெயல்படுவது எவ்வாறு சாத்தியமாகும்?

இருமொழி அல்லது மும்மொழி மாகாணங்களை உருவாக்குவது என்பது இன்றைய காங்கிரசின் மூலக்கொள்கையாகிவிட்டது. பீகார்—வங்க இணைப்பு மூலம், அக்கொள்கை உறுதி செய்யப்பட்டும் விட்டது. தெற்கிலும் தட்சிணப் பிரதேசம் என்ற பெயராலோ அல்லது வேறு எந்த ஒரு பெயராலோ, இருமொழி அல்லது மும்மொழி மாகாண இணைப்பு ஏற்படுத்துவது என்பதும் காங்கிரஸ் கட்சியால் முடிவுகட்டப்பட்டுவிட்ட ஒரு கொள்கையேயாகும். எனவே, காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவர் என்ற முறையில், இருமொழிமாகாண அமைப்பை கனம் காமராசரும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். உள்ளப்பூர்வமாக ஒப்புக்கொண்டும் இருக்கிருர் என்பது இனி வெளிப்படையாகத் தெரியவிருக்கிற உண்மையாகும்.

இரு மொழி மாகாண அமைப்புக் கருத்துக்கு கனம் காமராசரின் பரிபூரண ஆதரவு இருக்கவே இருக்கிறது. அதை இப்பொழுது கூறுவதா அல்லது பொதுத் தேர்தல் முடிந்த பிறகு கூறுவதா என்று காலத்தை நிர்ணயிப்பதில் தான் கனம் காமராசர் அவர்களுக்குக் குழப்பம் இருந்துவருகிறது. அதனல் தான் தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்துக்கு ஆதரவு திரட்டும் முழுப் பொறுப்பை நிதி அமைச்சரிடம் முதலமைச்சர் ஒப்படைத்திருக்கிருர். இருந்தாலும் முதலமைச்சரும் ஆதரவு திரட்ட முன்வந்து இருக்கிருர். அதுபற்றி நாளை விளக்கமாக எழுதுவோம்.

குதிரை வாங்கத் தந்த பணத்துக்கு கோயில் கட்டினரா?

'இன்று செய்தால் அது நம்பிக்கைத் துரோகமாகும்'

'மாணிக்கவாசகருக்கு இரண்டாண்டு காவல் தண்டனை நானே அளித்திருப்பேன்'

மாவட்ட மாஜிஸ்திரேட்டின் மணிவாக்கு

கோவை, பிப். 26—

"திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் இப்போது இருந்திருந்து, பரி வாங்கத் தந்த பணத்துக்கு அவர் ஆலயம் எழுப்பியிருந்தால், அவர் 'நம்பிக்கைத்துரோகி' என்று குற்றம் சாட்டப்பட்டு, இரண்டாண்டுக் காவல் தண்டனை விதிக்கப்பட்டிருப்பார்" என்று, வேடிக்கையாகக் கோவை மாவட்ட மாஜிஸ்திரேட் திரு பி. எஸ். சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

பேரூர் சாந்தலிங்க அடிகளார் கல்லூரி விழாக்களில் ஒரு நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அவர் மேலும் கூறினர்:—

"ஆலயங்களிலும், மடங்களிலும் குவிந்து கிடக்கும் செல்வங்களைக் கல்வி அபிவிருத்திக்காகச் செலவிடுவது பற்றிப் பேச்சு வந்தபோது அதற்கு எதிர்ப்பு இருந்தது; அவ்வாறு எதிர்ப்பு வருவதற்கு இடமே இல்லை; ஏனெனில் நல்ல காரியங்களுக்காக அந்தப் பணம் செலவிடப்படுவது வரவேற்கப்படவேண்டியதாகும்.

"மாணிக்கவாசகர் இது போன்று குதிரை வாங்குவதற்காகக் கொடுக்கப்பட்ட பணத்தைக்கொண்டு ஆலயம் எழுப்பினர். இப்போது மாணிக்கவாசகர் இருந்து அதைச் செய்திருந்தால் அவருக்கு நானே நம்பிக்கைத் துரோகக் குற்றத்திற்காக இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்திருப்பேன்; ஆனல், மாணிக்கவாசகர் காலத்தில், அது, அவ்வாறு கருதப்படவில்லை.

நீக்ரோ மாணவியின் வழக்கு வெற்றி

வெள்ளையர்கள் படிக்கும் அலபாமா பல்கலைக் கழகத்திலிருந்து விலக்கப்பட்ட நீக்ரோ மாணவி லூசியை மீண்டும் சேர்த்துக் கொள்ளுமாறு அலபாமா பல்கலைக் கழகத்துக்கு அமெரிக்க பெடரல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டிருக்கிருர் எனத் தெரிகிறது.

'மார்ச் 5-ந் தேதிக்குள் அம்மாணவி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்' என்று தீர்ப்புக் கூறுகிறதாம்.

பள்ளிகளில் நிறவேற்றுமை கூடாதென்று சுப்ரீம் கோர்ட் அளித்துள்ள தீர்ப்பு நிறைவேற்றப் படுமென்று தாம் நம்பிக்கைக் கொள்வதாக அமெரிக்கத் தலைவர் ஐசன்ஹோவர் கூறியுள்ளார்.

ஆரம்பமாகிறதாம்!

சென்னை, மார்ச் 1—

சென்னைக்கும்— இரங்கூனுக்குமிடையே நேர் கப்பல் போக்குவரத்து இம்மாத இறுதியில் மீண்டும் ஆரம்பமாகும்.

ஆவடி மாநாட்டிற்கு சென்னை சர்க்கார் செலவழித்த தொகை

சென்னை, மார்ச் 1—

போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு, சாலை அமைப்பு ஆகிய பல வேலைகளை செய்கதால் ஆவடி காங்கிரஸ் மாநாட்டிற்கு சென்னை சர்க்கார் ரூ 10,22,118 செலவழித்ததாம்!

ஆவடி மாநாட்டை சினிமாப் படம் பிடிப்பதற்கு ரூ. 12,300 வேறு செலவிடப்பட்டதாம்!

சென்னை சட்டசபையில்கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், நிதி அமைச்சர் சுப்பிரமணியம் இத்தகவலைத் தந்துள்ளார்.

மறந்துவிடவில்லையாம்!

பக்தவத்சலனர் கூறுகிருர்

"சென்னை மாநிலங்களிலுள்ள காடுகளில் கிடைக்கும் மரச் செல்வத்தை பயன்படுத்தி சாதாரணக் காகிதம், பத்திரிகைத் தான் உற்பத்தி செய்வதில் சர்க்கார் கவனம் செலுத்திவருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசத்தில் சாதாரணக் காகிதம் உற்பத்தி செய்ய தனி நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. காகிதம் உற்பத்திக்கு நீலகிரியிலும், பத்திரிகைக் காகித உற்பத்திக்கு மலபாரிலும் சர்க்காரே ஆலைகள் நிறுவும் நிலைமையை யோசித்துவரப்படுகிறது. காகித உற்பத்திசாலை அமைக்க மேட்டூரிலும் வசதியுண்டு என்பதை சர்க்கார் மறந்துவிடவில்லை," என்று, சென்னை சட்டசபையில் விவசாய அமைச்சர் தெரிவித்தாராம்.

துர்காபூர் உருக்குத் தொழிற்சாலை

டெல்லி சர்க்காருக்கு பிரிட்டிஷ் கம்பெனி கடன் தருகிறது

புதுடில்லி, மார்ச். 1—

கல்கத்தாவிலுள்ள துர்காபூரில் துவங்கப்படவிருக்கும் உருக்குத் தொழிற்சாலை நிர்மாணத்திற்காக இந்திய சர்க்காருக்கு 115 இலட்சம் பவுன் கடன் தருவதற்காக 'லாஜ்ரர்ட் பிரதர்ஸ்' என்ற பிரிட்டிஷ் நிறுவனத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனராம்.

'பிரிட்டிஷ் பாங்க் சிண்டிகேட்' இந்த கடன் வசதியளிப்பதாகத் தெரியவருகிறது.

இங்கிலாந்திலிருந்து துர்காபூர் தொழிற்சாலைக்குத் தருவிக்கப்படும் உபகரணங்களுக்குப் பணம் தருவதற்கு இந்தக் கடன் தொகை பயன்படுத்தபபடுமாம்.

பம்பாய் கலவரம் விளைவித்த சேதம்

அண்மையில் நடைபெற்ற கிளர்ச்சிகளில் குஜராத்தியர் மட்டுமே கிளர்ச்சிக்காரர்களால் தாக்கப்பட்டனர் என்றும், ஒரு மார்வாரியும், 39 குஜராத்தியரும் தாக்குண்டதாகவும், 3 குஜராத்தியர் இறந்துவிட்டதாகவும் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய் சட்டசபையில் தெரிவித்தாராம்.

"சுமார் ரூ. 37,48,860 பெறுமானமுள்ள சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன; அவற்றில் ரூ. 1,67,330 பெறுமானமுள்ளவை மீட்கப்பட்டன; இந்த புள்ளி விவரங்கள் எல்லாம் குத்து மதிப்பானவையே; உண்மையில் சேதங்கள் இரு மடங்காகவும் இருக்கலாம்" என்றும் அவர் கூறினாராம்.

இந்திய விவசாய ஆராய்ச்சிக் கௌன்சில், விவசாய, கால்நடை வளர்ப்பு ஆராய்ச்சித திட்டங்களுக்காக அடுத்த மூன்று வருட காலத்துக்கு மொத்தம் ரூ. 212 இலட்சம் அனுமதித்துள்ளது.

ஜப்பான் முறை அறிய இந்தியா வரும் சீனர்!

புதுடில்லி, மார்ச் 1—

ஜப்பான் முறை பற்றித் தெரிந்து கொள்ள சீனநாட்டவர் இந்தியா வருகின்றனராம்!

ஜப்பானிய முறையில் நெல் சாகுபடி செய்வதெப்படி என்பதறிய சீனவிலிருந்து இந்தியாவிற்கு, வரும ஆகஸ்டு திங்களில் தூதுக் குழு ஒன்று வருகிறதாம்.

1955—56ம் ஆண்டில் இந்தியாவில் சுமார் 16 இலட்சம் ஏக்கர் நிலம் ஜப்பானிய முறையில் சாகுபடி செய்யப்பட்டதாம்.

பிப்ரவரி 20-பெற்ற பெருர் வெற்றி

தமிழகம் தரும் நற்செய்தி

தமிழகம் கண்டறியாத பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு கடந்த பிப். 20-ல் நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்புக்குரிய அந்த மகத்தான சம்பவம், தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் நடைபெற்றுள்ள விபரங்கள் நமக்குக் கிடைத்தவண்ண முள்ளன ; அவற்றினை முடிந்தவரையில் சுருக்கித் தந்து வருகிறோம்.

சிறு சிறு கிராமங்களில்கூட விவசாயிகள் எல்லாம் வேலைக்குச் செல்லாதிருந்திருக்கின்றனர் ; அறுவடைகூட அன்று பல ஊர்களில் நடைபெறவில்லை.

பொங்கிவழிந்த ஆர்வத்தோடு, பிப். 20—பொது வேலை நிறுத்தம் நடைபெற்றிருப்பதை இந்த நிகழ்ச்சிச் சுருக்கங்கள் சொல்லுகின்றன.

திருமங்கலம் வட்டம்

திரிமங்கத்தை அடுத்த வாகைக் குளம், செக்கானூரணி, கல்லுப்பட்டி ஆகிய ஊர்களில் பொது வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடந்தேறியது கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டன ; தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர் வாகைக் குளத்தில் தோழர் உவே கண்ணு தலைமையில் மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு முக்கிய வீதி வழிவாய்வந்து 'மங்கைத் திடலில்' வந்தடைந்தது. உறுதிமொழி வாசிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

கூம்பூர்

பொது வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது கடைகள் பள்ளிகள் எல்லாம் மூடப்பட்டன.

நல்லூர் கந்தம்பாளையம்

எல்லா கடைகளும் மூடப்பட்டு வேலைநிறுத்தம் அமைதியாக நடைபெற்றது. அன்று மாலை ஆலமரத்தடியில் தோழர் என் பி. ராமசாமி தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசினர். உறுதிமொழி ஏற்கப்பட்டது.

உசிலம்பட்டி

எல்லாக் கடைகளும் மூடப்பட்டன ; ரொட்டிக்கடைகள் முழுவதும் அடைக்கப்பட்டன ; ஒரே ஒரு காபி கடைமட்டும் திறந்திருந்தது ; அங்கு பொதுமக்களைச் சாப்பிடவேண்டாம் என வேண்டுகோள்விடுத்த தோழர்கள் பதினன்கு போகள் கைது செய்யப்பட்டு மறுநாள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டனர். மாலை 2 மணிக்கு 5000 பொதுமக்கள் அடங்கிய மாபெரும் ஊர்வலத்தை சர்வ கட்சி கூட்டணியினர் வெற்றிகரமாக நடத்தினர்.

மண்பரை

தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை ; கடைகள் மூடப்பட்டது ; பள்ளி மாணவர்கள் 100-க்கு 75 சதவிகிதம் பள்ளிக்குச் செல்லவில்லை.

கொழப்பலூர்

கடைகள், நெல் அரைக்கும் இயந்திரசாலைகள் மூடப்பட்டும் அஞ்சல்கள் பட்டுவாடா செய்யப்படாமலும், போர்டு உயர்தர ஆரம்பப் பள்ளிக்கு 93 சதவிகித மாணவர்கள் செல்லாமலும், ஆர். சி எம். பாடசாலைக்கு 93 சதவிகித மாணவர்கள் செல்லாமலும், ஊராண்மைக் கழக அலுவல்கள் நடைபெறாமலும், கிராம அதிகாரிகளுடைய அரசாங்க அலுவல்கள் நிறுத்தப்பட்டும் அர்த்தால் சிறப்பாக நடைபெற்றது.

சோபனபுரம்

முழு கடையடைப்பு நடைபெற்றது. ஏராளமான தொண்டர்களுடன் ஊர்வலம் நடைபெற்றது. அன்று கீழ்க்கண்ட 18 தோழர்களும் கைது செய்யப்பட்டனர் :—சே. அ தணிகாசலம், கோபாலகிருஷ்ணன், நடேசன், மு. அருணாசலம், எஸ். எம். பி. மணியம், நா. ராஜு, சோ. ரா. நடராசன், லச்சுமணன், மாணிக்கம், எஸ் டி ஆறுமுகம், எஸ். டி. சீனிவாசன், அ முத்துசாமி, அ ராமசாமி, பொ. முத்துசாமி, முகமது அலி, கிருஷ்ணமூர்த்தி, முத்து ரெட்டி, கணேசன்.

குமாரபாளையம்

எல்லாக் கடைகளும், தொழிற்சாலைகளும் மூடப்பட்டன; தொழிலாளர்களும் எந்த வேலையும் செய்யாமல் அர்த்தாலை வெற்றிகரமாக நடைபெறச் செய்தனர். காங்கிரஸ்காரர்கள் முதலில் எதிப்பு நோட்டீஸ் விடுத்த இருந்தும், அவர்களாகவே கடைகளை மூடிவிட்டார்கள். பொதுவாக அர்த்தால் வெற்றிகரமாக நடந்தது. மாலை ஊர்வலமாக வந்து ஓரிடத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்டு மக்கள் கலைந்தனர்

திருக்கோட்டியூர்

பொது வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது; காங்கிரஸ்காரர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. தோழர்கள் ந இராமச்சந்திரன், எஸ். எஸ் வாசன், கரு. முனியாண்டி, இராவணன், கி. முத்துச்சாமி ஆகியோர் அர்த்தாலை முன்னின்று நடத்தினர். பெரும் பகுதிப் பார்ப்பனத் தோழர்கள் அர்த்தாலுக்கு ஆதரவு தந்தது குறிப்பிடத்தக்கதாகும் காங்கிரஸ்காரர்கள் போலீசாருக்கு தகவல் கொடுத்ததின்பேரில் போலீஸ் அதிகாரிகள் வந்து கழகத் தோழர்களை விசாரித்து போயிருக்கிறார்கள்.

உவிபுரம்

முழு அர்த்தால் நடைபெற்றது காலை 8 மணிக்கு சாவடியிலிருந்து வியாபாரிகளும், கடைக்காரர்களும், தொழிலாளர்களும் 500 பேர் கொண்ட ஊர்வலம் புறப்பட்டது. கடைகள் எல்லாம் திறக்கப்படவில்லை; தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை; பொது மக்கள் அனைவரும் அமைதியுடன் அர்த்தாலை சிறப்புடன் நடத்திக் கொடுத்தனர். அன்று மாலை சாவடி மைதானத்தில் தோழர் ஆ தி. ரா. துரைசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசிய பின், உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

இராமச்சந்திரபுரம்

பொது வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. சுமார் 1,000 நெசவாளர்களும், வியாபாரிகளும் வேலை நிறுத்தம் செய்தார்கள். மாலை மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு முக்கிய வீதிவழியாய் வந்து தி. மு கழகத்தின் முன்வந்தடைந்தது. தோழர் மு. நாராயணன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் உறுதிமொழி வாசிக்கப்பட்டது.

குமாரமங்கலம்

இவ்வூரில் கடையடைப்பும் பொது வேலைநிறுத்தமும் அமைதியாக முழு வெற்றியுடன் நடைபெற்றது.

திருத்துறைப்பூண்டி

அர்த்தால் சிறப்பாக நடைபெற்றது. மாலை 3-மணிக்கு திருத்துறைப்பூண்டி பஞ்சாயத்துபோர்டு பிரசிடெண்டும் சர்வ கட்சி கமிட்டித் தலைவருமான தோழர் பி கே. எம். சேக் அப்துல் காதர் தலைமையில் சுமார் 5,000 விவசாயிகளும், பொதுமக்களும் கொண்ட ஓர் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. இறுதியில் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

தர்மபுரி—சேலம்

இங்கு முழு வேலைநிறுத்தம் நடைபெற்றது காலை 10 மணிக்கு தர்மபுரி முசாபரி பங்களாவிலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய தெருக்கள் வழியாக வந்து தீர்த்தகிரியார் மைதானத்தை அடைந்தது. அங்கு உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

பொன்மலை

அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது 'அர்த்தாவில் கலந்து கொள்ளக் கூடாது' என்று திராவிட கழகத்தார் சுவரொட்டிமூலம் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தும் பொன்மலை—மேலக்கற்கண்டார்கோட்டை, பொன்மலைப் பட்டி, அதன் சுற்று வட்டாரங்களில் அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது. மேலக்கற்கண்டார்கோட்டையில் திராவிட கழகத்தாரின் இரு கடைகள் தவிர இதர எல்லாக் கடைகளும் மூடப்பட்டுக் கிடந்தன.

நீர்முள்ளிக்குட்டை

எல்லாக் கடைக்காரர்களும் கடையடைப்புச் செய்தனர். சவ்வரிசி மில்லில் சுமார் 100 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததால் மில் மூடப்பட்டது. பக்கத்து கிராமங்களிலும் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. சர்வ கட்சிக் கூட்டணி சார்பில் ஊர்வலம் நடைபெற்று, உறுதிமொழி ஏற்கப்பட்டுக் கலைவுற்றது.

ஏனங்குடி

திருப்புகலூர், வவ்வாலடி, கயத்தூர், ஏனங்குடி, மாதிரிமங்கலம் ஆகிய ஊர்களில் பொதுவேலை நிறுத்தமும், கடையடைப்பும் சிறப்பான முறையில் நடைபெற்றது. மாலை திருப்புகலூரிலிருந்து ஏனங்குடிவரை தோழர் ஷம்சுதீன் தலைமையில் ஊர்வலம் வந்து உறுதிமொழி வாசிக்கப்பட்டு, அமைதியாகக் கூட்டம் கலைந்தது.

கும்மிடிபூண்டி

20—2—56 காலை பொதுவேலை நிறுத்தம் — கதவடைப்பு நடைபெற்றது.

காலை 8 மணியிலிருந்து 11 மணி வரை தோழர் டி. மாரிமுத்து தலைமையில் ஊர்வலம் முக்கிய வீதிகளின் வழியே சென்றது ; பெருவாரியான தோழர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். கே. எல். கிருஷ்ணசாமி (நாயுடு) உயர் நிலைத் துவக்கப் பள்ளியில், 300 மாணவர்களில் 25 மாணவர்கள்தான் காலையில் பள்ளிக்குச் சென்றனர் ; மாலையில் அதுகூட இல்லை.

திட்டுவிளை வட்டம்

தோவாளை தாலுகாவில் அழகிய பாண்டியபுரம், பூதப்பாண்டி, பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதிகளில் முழு வேலை நிறுத்தமும், ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

கேசவன்புதூர், எட்டாமடை, அழகிய பாண்டியபுரம், அருமநல்லூர், கடுக்கரை, தெரிசனங்கோப்பு, திட்டுவிளை, பூதப்பாண்டி ஆண்டிதோப்பு, நயினார்தோப்பு ஆகிய ஊர்களில் உள்ள கடை வியாபாரிகள் கடைஅடைப்பு செய்தார்கள் ; கடுக்கரை முதலான இடங்களில் 'ரைஸ் மில்'கள் ஓடவில்லை ; மணத்திட்டை பாரதி தியேட்டரில் சினிமா காட்சி நிறுத்தப்பட்டது. பூதப்பாண்டி, குறுத்தியறையிலுள்ள நடுத்தர உயர்தரப் பள்ளிக்கூடங்களுக்கு முறையே விடுமுறை அளிக்கப்பட்டன.

மாலை 6 மணி அளவில் திட்டுவிளை ஆசாத் திடலில் மாபெரும் பொதுக்கூட்டமொன்று தோழர் வு. ராஜ் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. எஸ். எஸ். மணி, அழகை பி நீலகண்டன் ம. சண்முகம், ம வேலப்பன் ஆகியோர் பேசினர். இறுதியில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

உலகத்திலேயே அதிகமான இரயில்களைச் சந்திக்கும் புகைவண்டி நிலையம்

புதுடில்லி, மார்ச் 1—

உலகத்திலேயே அதிகமான இரயில்களைச் சந்திக்கும் நிலையம், கல்கத்தாவில் உள்ள 'சீல்டா' இரயில் நிலையம் தானும்.

நாள்தோறும் 248 இரயில்களை இந்த நிலையம் சந்திப்பதாக மாநிலங்கள் சபை உறுப்பினர் டாக்டர் ஆர். கே. முகர்ஜி தெரிவித்திருக்கிறார்.

'சீல்டா' இரயில் நிலையம் தினம் 2 இலட்சம் பிரயாணிகளைச் சமாளிப்பதாயும், 1,000 மணங்கு மீன் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதாயும், இங்குள்ள 'கண்ட்ரோல் காபின்'கள் 24 மணி நேரத்தில் 23,000 முறைகள் இயக்கப்படுவதாயும், வெளியிலிருந்து வரும் பார்சல்கள் 4,000—இங்கிருந்து வெளியே செல்லும் பார்சல்கள் 5 000—இவற்றைக் கையாளுவதாயும் அவர் தகவல் தந்துவிட்டு, இந்த இரயில் நிலையத்தை அபிவிருத்தி செய்வது தான் இரயில்வேயின் முதன்மையான வேலையாக இருக்கவேண்டும் என்று அவர் வற்புறுத்தியதாகத் தெரியவருகிறது.

அயோத்தியாபட்டணம்

பல வியாபாரக் கடைகளும் மூடப்பட்டன ; அரிசி மார்க்கெட் கூடவில்லை. சவ்வரிசி 'பேக்டரி', 'ரைஸ் மில்'களும் மூடிக் கிடந்தன. அமைதியான முறையில் அர்த்தால் நடைபெற்றது. தோழர் கே. இராமசாமி என்பவர் கைது செய்யப்பட்டார்.

நல்லவன்னியன் குடிக்காடு

நல்லவன்னியன் குடிக்காடைச் சேர்ந்த கோவிலூர், சங்கரதேவன் குடிக்காடு முதலிய சிற்றூர்களில் கடையடைப்பும், பொது வேலை நிறுத்தமும் அமைதியுடன் நடைபெற்றது.

இராசபாளையம்

கடையடைப்புச் செய்யப்பட்டது ; ஏராளமான அளவில் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை மாலையில் ஓர் மாபெரும் ஊர்வலம் தோழர் ஏ. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. போஸ் மைதானத்தில் தோழர் ஏ. சிவ-பிரகாசம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் அ. இராமலிங்கம், ஏ. சீனிவாசன், கார்மேகம் ஆகியோர் பேசினர். பின்னர் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

கந்திலி வட்டம்

எல்லாக் கடைகளும் கடையடைப்பு செய்யப்பட்டது. கிராமப் பள்ளி முன் இரு தோழர்களைக் கைது செய்து, போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று மாலை 3 மணிக்கு விடுதலை செய்தனர்.

கந்திலியிலும், செஜல்நாயக்கம் பட்டியிலும் மாலை 6 மணி வரையில் பூரண அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது.

பள்ளிகொண்டா

கடைகள், அரிசி ஆலைகள், பள்ளிகள், பஞ்சாயத்து போர்டு, பாங்கி, ரிஜிஸ்தர் ஆபீசு முதலியவைகள் மூடப்பட்டன. மாலை 6-மணிக்குப் பொதுக் கூட்டம் நடைபெற்று உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

சென்னை—சைதை

இதுவரையில் நடைபெற்றிராத அளவில் 5,000 நெசவுத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். 500 தோய்ச்சல் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர். பலதரப்பட்ட கடைக்காரர்களும் தங்கள் கடைகளை மூடிவிட்டனர். கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம், காங்கிரஸ் கவுன்சிலரைத் தலைவராகக் கொண்ட விசாகத் தோட்டம் நெசவாளர் கூட்டுறவு சங்கம் இவைகளும் மூடப்பட்டது. நகரசபை உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. தோழர்கள் பலர் போலீசாரால் தாக்கப்பட்டனர்.

நமனசமுத்திரம்

வர்த்தகர்கள் தங்கள் கடைகளை அடைத்தும், தொழிலாளர்கள் 100-க்கு 85 பேர் வேலைக்குப் போகாமலும் அமைதியான முறையில் அர்த்தால் நடைபெற்றது. தொழிற் சங்கத்தின்முன் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

பஞ்சாப் மாநிலம்

மூன்று தனி மொழி வட்டாரங்களாகும்

சாந்திகார், மார்ச் 1—

"பஞ்சாப் மாநிலத்தில், அரசாங்க மொழிகளாக இந்தியும், பஞ்சாபியும் ஏற்கப்படும்.

"மொழிவழியாக மாநிலம் மூன்று பிரிவுகளாக—இந்தி, பஞ்சாபி, இருமொழிப் பிரிவுகளாக—நிர்வகிக்கப்படும்.

"நிர்வாகம் வட்டார மொழியிலேயே மாவட்ட நிலையிலும்கூட நடைபெறும்,"

என்று பஞ்சாப் சட்டசபை வரவு-செலவுத் திட்டம் பற்றிய விவாதத்திற்காகக் கூடியிருக்கும்போது துவக்கவுரை ஆற்றிய கவர்னர் சி. பி. என். சிங் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"இந்தி, பஞ்சாபி இரண்டும் தேவநாகிரி, குர்முகி லிபிகளில் உபயோகிக்கப்படும்.

"சர்க்காரின் சட்டங்கள், விதிகள் முதலியனவற்றை இந்த வட்டார மொழிகளில் மொழி பெயர்ப்பதற்காகத் தனி இலாகா திறவப்பட்டிருக்கிறது.

"இரண்டாவதாக, எல்லா சர்க்கார் ஊழியர்களும் இந்தி, பஞ்சாபி மொழிகளில் நிர்வாகப் பயிற்சி பெறுவர் ; மூன்றாவதாக, 1960-ம் ஆண்டிற்குள் நிர்வாகம் இந்த வட்டார மொழிகளில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

பொதும்பு

பண்ணைத் தொழிலாளர்களும், கதிர் அறுவடைத் தொழிலாளர்களும், கடை வியாபாரிகளும், கரும்பு ஆலைத் தொழிலாளர்களும், கல்லுடைப்புத் தொழிலாளர்களும், பள்ளி மாணவ - மாணவிகளும், மற்றும் பொதுமக்களும் அர்த்தாலை அமைதியான முறையில் நடத்தித் தந்தனர்.

வடக்கநந்தல்

மக்கள் அனைவருமே ஒன்று திரண்டு, பொது வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்டு எவ்வேலைக்கும் செல்லாமல் பொது வேலை நிறுத்தம் செய்தனர்.

மாலை 4 மணிக்குப் புறப்பட்ட ஊர்வலத்தில் 2,000-க்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். ஊர்வலம் வள்ளுவர் திடலில் மாலை 6-30 மணிக்கு வந்ததபின் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அம்மாப்பேட்டை (தெ. ஆ.), பரிகம், எடுத்தவாய்நத்தம், செல்லம்பட்டு, மாத்தூர் ஆகிய ஊர்களிலும் முழு அர்த்தால் நடைபெற்றது. அம்மாப்பேட்டையில் ஒரு மாணவரும் பள்ளிக்குச் செல்லவில்லை.

வண்டிப்பெரியார்

இஞ்சிக்காடு, தங்கமலை, மஞ்சிமலை, பணியாரப்பாறை, ஆனைக்கல் டைமூக், அமராவதி, மூறுக்கடி, தேங்காக்கல், காடிக்குழி ஆகிய தேயிலைத் தோட்டங்களில் சுமார் 10 000 தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தம் செய்தார்கள். இந்த எஸ்டேட்களில் அமைதியாக எவ்வித அசம்பாவிதமுமின்றி அர்த்தால் மேற்கொள்ளப்பட்டது.

மாணவர்கள் கிளர்ச்சியின் எதிரொலி

திருவனந்தபுரம் ஆயுர்வேத கல்லூரி மூடப்படும்

மாணவர்களின் 'சத்தியாக்கிரக'த்தை ஒட்டி எழுந்துள்ள நிலைகளின் காரணமாக திருவனந்தபுரத்தில் உள்ள ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை சிலகாலத்திற்கு மூடிவிடப் போவதாக திரு—கொச்சி சுகாதார மந்திரி ஏ. ஏ. ரஹீம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

ஆயுர்வேதம் படிக்கும் மாணவர்கள், படிப்பு முடிந்ததும் 'அலோபதி' முறையில் வைத்தியத் தொழில் நடத்தவும் அனுமதிக்க வேண்டுமெனக் கோரி வருகின்றனர். அதற்காக, இரண்டு மாணவர்கள் கடந்த சில வாரங்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர் என்று தெரியவருகிறது.

ஒரு மாணவர் இரண்டு நாட்களுக்கு முன்பு அலுவலகத்திற்குள் பிரவேசித்தாராம்.

அலுவலக தஸ்தாவேஜுக்களைக் கொளுத்திவிடும் நோக்குடன்தான் அவர் உட்புகுந்ததாகக் கூறப்படுகிறது.

அவரை போலீசார் கைது செய்திருக்கின்றனராம்

மேலும் கல்லூரித் தலைவரான டாக்டர் ஏ. லட்சுமிபதிக்குப் பல மிரட்டல் கடிதங்கள் வந்திருப்பதாயும், அதுபற்றி போலீசாருக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

சர்க்கார் இம்மாதிரி பலாத்கார நடவடிக்கைகளைச் சகித்துக் கொள்ள முடியாதெனவும், மாணவர்களின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு சர்க்கார் ஆவலுள்ளவர்களாயிருப்பதாயும், முடிந்தது எல்லாம் செய்யப்பட்டு வருவதாயும் மந்திரி ரஹீம் தெரிவித்திருக்கிறார்.

இன்ஷ்யூரன்ஸ்: பெரோஸ் காந்தி வர்ணனை

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

யும் களங்கத்திற்கு உள்ளாக்கிற்று என்பது உண்மைதான். ஆனால், அந்தச் சிலர்தான் ஒவ்வொரு 'பாலிசி'தாரர்களின் நம்பிக்கையையும் நாசமாக்கி விட்டவர்களாவர். அதே சிலர்தான் இன்ஷ்யூரன்ஸ் தொழிலை இழிநிலைக்கும், பழிப்புக்கும் உள்ளாக்கியவர்களாவர்.

"கவுடல்யரின் அர்த்த சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள 'கள்ளச் செயல்கள்' அனைத்தையும், இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள் சில கையாண்டுள்ளன. கீழ் குறிப்பிடப்படும் கள்ளத்தனங்களும் அந்த அர்த்த சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளன.

"முதலில் வசூலிக்கப்பட்டதை பின்னர் காலந்தாழ்த்தி ஏட்டில் வரவு வைப்பது; பின்னால் வசூலிக்கப்பட்டதை முன்கூட்டியே ஏட்டில் வரவு வைப்பது; வசூலிக்கப்பட வேண்டியது வசூலிக்கப்படாமல் இருப்பது; வசூலிக்கப்பட முடியாததை வசூலிக்கப்பட்டதாக எழுதுவது; வசூலிக்காததை வசூலித்து விட்டதாக ஏட்டில் எழுதுவது; தவணையாக வசூலிக்கப்பட்டதை வசூலிக்கவே இல்லை என்று ஏட்டில் எழுதுவது; தொகையையும் வசூலித்து விட்டு ஒரு பகுதியையே வசூலித்ததாக எழுதுவது; கொடுக்கப்படவேண்டியதைக்கொடுக்காமல் இருப்பது; கொடுக்கக்கூடாததை கொடுப்பது; சம்பந்தப்பட்டவன் ஒருவனாக இருக்க, கணக்கில் வேறு ஒருவனைக் குறிப்பிட்டு ஆள் மாருட்டம் செய்வது."

"சட்டப்படி கடமைப்பட்டிருந்தும்கூட, மொத்தமுள்ள 70 இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களில் 66 நிறுவனங்கள், தங்களுடைய தொழில் நிறுவனங்களை 1955 ஜூலை 7-ந் தேதியில், அதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் ஒப்படைக்கவே இல்லை.

"1954-ம் ஆண்டைய தொழில் விவரங்களை அல்லது கணக்கு மதிப்பீடுகளை 1955 அக்டோபர் மாதத்தில்கூட 23 நிறுவனங்கள் ஒப்படைக்கவே இல்லை.

"பதினேரு நிறுவனங்கள் விசேஷ நிர்வாக அதிகாரிகளின் கீழ் இருந்தன.

'இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களை மேற்கொள்ளும் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு பாதுகாப்பு வசதிகள் மறைந்துவிட்டன. நான்கு நிறுவனங்களின் மானேஜிங் டைரக்டர்கள் தலைமறைந்துவிட்டனர். இவைதான் தனியார் துறை இலட்சணம்!

"இந்தியாவில், இடையிலேயே முறிந்துவிடும் இன்ஷ்யூரன்ஸ் பாலிசிகள் 39·39 சதவிகிதமாகும். குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தில் இந்தப் பாலிசி முறிவு 100 சதவிகிதமாகும்.

"'ஒரு மரம், தான் ஈன்ற கனியைத் தானே விழுங்கி விடாது; ஒரு ஆறு, தன்னில் ஓடும் நீரைத் தானே பருகி விடாது,' என்று அக்பரின் அறமன்றத்தில் இருந்த அப்துர் ரகீம் என்ற கவிஞர் கூறியுள்ளார். ஆனால், இன்ஷ்யூரன்ஸ் தனியார் துறையோ பழத்தை விட்டுவிட்டு, முழு மரத்தையே விழுங்கிவிடக் கூடியதாக இருக்கிறது."

ரஷ்யக் கருவிகளுடன் விவசாயப் பண்ணை

தென்னாட்டில்நிறுவுமாறு சென்னை சர்க்கார் கோரவில்லை?

புதுடில்லி, மார்ச் 1—

"ரஷ்யா வழங்கியுள்ள இயந்திரங்களையும், விவசாயக் கருவிகளையும் உபயோகித்து 26,000 முதல் 32,000 ஏகரா பரப்பளவுள்ள பெரிய விவசாயப் பண்ணை நடத்த இந்திய அரசியலார் தீர்மானித்துள்ளனராம்!

ரஷ்ய இயந்திரங்களில் பெரும் பாலானவை இந்தியா வந்துவிட்டதாகத் தெரிகிறது.

நிலவளம், நீர்ப் பாசனம் போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றைப் பொறுத்துத்தான் பண்ணை இடம் தேர்ந்தெடுக்கப்படுமாம்.

உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆந்திரா, பீகார், மத்திய பாரத், இராஜஸ்தான், விந்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றும் தத்தமது மாநிலத்தில் இப்பண்ணையை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளதாகவும், இம்மாநிலங்களை நிபுணர்கள் குழு ஒன்று பரிசீலிக்குமென்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

சொற்பயிற்சிக் கூட்டம்

4—3—56 காலை 9 மணியளவில், சென்னை பெரம்பூர் பாரக்ஸ் இராமானுசம் தோட்டத் தெருவிலுள்ள திரு. வி. க. மன்றப் பணிமனையில் திரு. ஆ. உ. நடராசன் தலைமையில், 'தேவிகுளம்—பீர்மேடு' எனும் பொருள் பற்றி சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

கழகக் கூட்டம்

★

கீழ்க்கொடுங்காலூர்:
தி. மு. கழகத் துவக்க விழா
6—3—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
காஞ்சி-மணிமொழியார்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
வி. டி. அண்ணாமலை

மதுரையில் கலை விழா

11—3—56 ஞாயிறு இரவு 10 மணிக்கு, மதுரை தமுக்கும் மைதானம் திறந்த வெளி அரங்கில் அண்ணா அவர்கள் தலைமையில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் குழுவினர் நடிக்கும் 'விலாங்கு மனிதன்'; நடிப்பு இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி குழுவினர் நடிக்கும் 'வேலைக்காரி' நாடகத்தில் சில காட்சிகள்; புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும் 'அசோகன்' (ஓரங்க நாடகம்); நடிப்புச் செல்வர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும் 'மணிமகுடம்' நாடகத்தில் சில காட்சிகள்; மற்றும் நடிகை ராஜசுலோசனா முதலியோர் பங்கேற்கும் நாடக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மக்கள் சபைக்கு தெரியுமுன்!

வரவு - செலவுத் திட்டம் பம்பாயில் விற்கப்பட்டதாம்!

இந்தியப் பேரரசின் வரவு - செலவுத் திட்டத்தின் பிரரேபணைகள் மக்கள் சபையில் தாக்கல் செய்யப்படும் முன்பாக வெளியிடப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது.

இது குறித்து விசாரணை நடத்துமாறு டெல்லி உத்தரவிட்டிருக்கிறதாம்.

சர்க்காரின் பிரரேபணைகள் அச்சிட்ட பிரதிகள் பம்பாயில் விற்பனை செய்யப்பட்டன என்று கூறப்படுகிறது.

'பட்ஜெட்' பிரரேபணைகள் அடங்கிய பிரதிகள் பம்பாயில் விற்கப்பட்டபோது அதனை சில வர்த்தகர்கள் வாங்கியதாகவும், அவைகளை நிதி மந்திரியின் பிரசங்கத்துடன் ஒப்பிட்டபோது சொல்லுக்குச் சொல் சரியாயிருந்ததாயும் கூறப்படுகிறது.

இந்த வகையில், பிரரேபணைகள் வெளியானதற்கு யார் பொறுப்பாளி என்பது குறித்து டெல்லி, பம்பாய் வட்டங்களில் புலன் விசாரணை நடைபெறுமாம்!

கொழும்புத் திட்டத்தின்கீழ், இந்தியா சென்ற ஆண்டு ஜூன் மாதம் வரை, பல்வேறு நாடுகளுக்கு 14 நிபுணர்களையும், மாணவர்களின் பயிற்சிக்காக 340 உபகாரச் சம்பளங்களையும் கொடுத்துதவியிருக்கிறது.

திரு. கே. பி. கந்தசாமி (முதலியார்) மறைவு

வட ஆற்காடு மாவட்டத்திலேயே பிரபல கைத்தறி துணி வியாபாரியும், ஆரணி வட்டத்தில் 4,000 கைத்தறிக்கு வேலை தந்து வந்தவரும், கல்கத்தாவில் கைத்தறி துணி வியாபாரம் செய்துவருபவருமான சைதாப்பேட்டை (ஆரணி) கே. பி. கந்தசாமி (முதலியார்) அவர்கள் 57-வது வயதில் 1—3—56 மாலை 5-45 மணிக்கு வேலூர் அமெரிக்கன் மருத்துவ மனையில் இயற்கையெய்தினர்.

தாய் மொழியில் வரவு - செலவுத் திட்டம் தாக்கல்

ஆந்திராவிலும் ரூ. 3·24 கோடி பற்றுக்குறை

ஆந்திர மாநில வரவு-செலவுத் திட்டம் ஒரு பற்றுக்குறைத் திட்டமாகவே இந்த ஆண்டும் அமைந்திருக்கிறது.

வரவு ரூ. 23·7 கோடியாகவும், செலவு ரூ. 25 95 கோடியாகவும் இருக்குமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

துண்டு விழும் தொகை ரூ. 3·24 கோடியாக இருக்கிறது.

புது வரி விதிப்புகளுக்குப் பின்னரும் இவ்வளவு பெரிய தொகை துண்டு விழுகிறது.

இனும் நிலங்களுக்கும் முழு வரி விதிப்பு (ரூ 46-இலட்சம்), ஆலைத் துணிகள், விலையுயர்ந்த கற்கள்மீது விற்பனை வரி (ரூ. 50-இலட்சம்), பதம் செய்யப்படாத புகையிலை மீது கொள்முதல் வரியும், பீடி போன்ற புகையிலைப் பொருள் மீது விற்பனை வரியும் (ரூ. 60 இலட்சம்), நிலவரி 'சர்சார்ஜ்' (ரூ. 45-இலட்சம்), கோர்ட்டு கட்டண விகிதங்கள் உயர்வு (ரூ. 15-இலட்சம்)ஆக ரூ. 2 16 கோடி புது வரி விதிப்பு புகுத்தப்படுகிறது.

வரவு-செலவுத் திட்டம் முதன் முதலாக இந்த ஆண்டில் தெலுங்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ஆந்திராவில் மேலும் ஒரு பொறியியல் கல்லூரி

ஆந்திர மாநிலத்தில் புதிய பொறியியல் (என்சினீயரிங்) கல்லூரி ஒன்று துவக்கப்படவிருக்கிறது.

1956—57-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 8·75 இலட்சம் வரை ஆந்திரப் பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கித் தரப்பட்டிருக்கிறது.

மேலும் புதிய உயர்தர ஆரம்பப் பாடசாலைகள், நடுத்தரப் பள்ளிகள், ஆதார பள்ளிகள் துவக்குவதற்காக ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

காக்கினடா, அனந்தபூர் ஆகிய இடங்களில் உள்ள என்ஜினீயரிங் கல்லூரிகளில் 'டிப்ளமா' பட்டப் படிப்பு ஏற்படுத்துவதற்காக ரூ. 3·38 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திட்டம் பற்றி பேசிய முதன் மந்திரி கோபால ரெட்டி இதர பல துறைகளுக்கும் ஆந்திர மாநிலத்தில் செலவிடப்போகும் பணம் பற்றி விளக்கியிருக்கிறார்.

பொது சுகாதாரத்திற்கு ரூ. 1·02 இலட்சம், கால்நடை அபிவிருத்திக்கு ரூ. 4·57 இலட்சம், கூட்டுறவு இயக்கவிருத்திக்கு ரூ 2 03 இலட்சம், விவசாயத்துறைக்கு ரூ. 2·31 இலட்சம், சாலைகள் பாதுகாப்பிற்கு ரூ. 5 80 இலட்சம், கிராமப் போக்குவரத்திற்கு ரூ 301 இலட்சம், ஸ்தலஸ்தாபன ஊழியருக்கு கிராக்கிப்படி தர 5·00 இலட்சம் என்று திட்டமிட்டிருக்கிறார்கள்.

பல மாநிலங்களின் வரவு-செலவுத் திட்டங்கள்

★

மத்திய பாரத்:

மத்தியபாரத் மாநிலத்தின் 1956—57-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் குவாலியர்ஸ் சட்டசபையில் நிதி மந்திரி மிஷ்ரிலால் கங்குவால் என்பவரால் தாக்கல செய்யப்பட்டது. வருமானம் ரூ 19·07 கோடி என்றும், செலவு ரூ 19 05 கோடி என்றும், எனவே உபரி ரூ. 2 இலட்சம் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரிசா:

ஒரிசா மாநிலத்தின் 1956-57ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் புவனேஸ்வர் சட்டசபையில் நிதி மந்திரி ராத்நாத் ரத் என்பாரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. பற்றுக்குறை ரூ. 5,60 58.000 என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

டெல்லி:

1956—57-ம் ஆண்டிற்கான டெல்லி மாநில வரவு - செலவுத் திட்டம் சட்டசபையில் முதன் மந்திரி குருமுக் நிகல் சிங் என்பாரால் தாக்கலாயிற்று.

வருமானம் ரூ 537 82 இலட்சம் என்றும், செலவினம் ரூ. - 661 84 என்றும், எனவே, துண்டு விழும் தொகை ரூ 124 02 இலட்சம் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

துண்டு விழும் தொகையைச் சரிக்கட்ட ரூ. 73 - இலட்சம் வரையில் மத்திய சர்க்கார் மானியம் அளிப்பார்கள் என்றும் தெரிய வருகிறது.

விந்தியப் பிரதேசம்:

விந்தியப் பிரதேச நிதிமந்திரி மகேந்திர குமார் மணவ் சட்டசபையில் தாக்கல் செய்துள்ள 1956-57-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டப்படி வருமானம் ரூ. 600 79 இலட்சம் என்றும், செலவு ரூ 610·93 இலட்சம் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. துண்டு விழும் தொகை ரூ 10·14 இலட்சமாகும்.

'மதி' கையெழுத்துப் பிரதி வெளியீட்டு விழா

திருத்துறைப்பூண்டி பஜீதா மன்றச் சார்பில் வெளியிடப்போகும் 'மதி' என்னும் கையெழுத்துப் பிரதியின் வெளியீட்டு விழா 4—3—56 மாலை 4 மணியளவில் திரு. வி. பொ. பழனிவேலன் தலைமையில் திருத்துறைப்பூண்டி தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும்.

திருச்சி நகர தி. மு. கழக செயற் குழுக் கூட்டம்

5—3—56 இரவு 9 மணிக்கு நெ. 9, கிலேதார் தெரு நகர தி மு. கழக அலுவலகத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அது சமயம், உறுப்பினர் வாரம்; நகர தி. மு கழக ஆண்டு விழா; ஆக்க வேலைகள்; வரவு-செலவு ஆகியவை பற்றி முடிவு செய்யப்படும்.

பெட்ரோலியம் தொழிலாளர் மாநாடு

"அகில இந்திய பெட்ரோலியம் தொழிலாளர்கள் இரண்டாவது ஆண்டு மாநாடு சென்னையில் மார்ச் 5-ந் தேதி முதல் 10-ந் தேதிவரையில் நடைபெறும்.

'பர்மா-ஷெல்', 'கால்டெக்ஸ்', 'ஸ்டாண்டர்டு வாகுவம் ஆயில் கம்பெனி', 'இந்தோ-பர்மா பெட்ரோலியம் கம்பெனி' ஆகியவற்றில் பணிபுரியும் 18,000 தொழிலாளர்களின் பிரதிநிதிகளாகச் சுமார் 100 பேர் வரை, தங்கசாலைத் தெரு, 36-ம் எண்ணுள்ள கட்டிடத்தில் நடைபெறும் அந்த மாநாட்டில் கலந்துகொள்வர்.

சீனு, பாகிஸ்தான் நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளக் கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மார்ச் 6-ந் தேதி காலை 9 மணியளவில், தோழர் எஸ். குருசாமி (இரயில்வே தொழிலாளர் சங்கம்) அவர்களால் மாநாடு துவக்கிவைக்கப்படும்." என்று வரவேற்புக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.